**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், உத்தமபாளையம்.**

**முன்னிலை: திருமதி.M.பிரவீணா, M.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி
**உத்தமபாளையம்.**

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 17–ம் நாள் புதன்கிழமை

**அசல் வழக்கு எண். 10/2026**
(Original Suit CNR No. TNTH06-000-009-2026)

1) P.முருகேசன் (எ) முருகன்
2) M.ஜெயப்பிரியன் (எ) முருகேஷ் . . . வாதிகள்

/எதிராக/

M.தெய்வேந்திரன்
. . . பிரதிவாதி

இவ்வழக்கு என் முன்பாக 10.06.2026 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.A.லலிதா B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கு பிரதிவாதிக்கு அழைப்பாணையானது சார்வு செய்யப்பட்டும், அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மேற்படியாருக்கு எதிராக 27.03.2026ம் தேதியில் ஒரு தலைப்பட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்

**தீர்ப்புரை**

தாவா சொத்தில் வாதிகளின் தனித்த சுவாதீன அனுபவத்தை பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்ட்களோ எவ்வித இடையூறும்,

தொந்தரவும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவு தொகை கோரியும் வாதிகளால் தாவா தாக்கல்.

**2. வழக்குரையின் சுருக்கம்**

தாவா சொத்தானது உத்தமபாளையம் தாலுகா, கூடலூர் டவுனில் அமைந்துள்ளதாகவும், தாவா சொத்துக்களானது மனை மற்றும் மனையிடம் என்றும், மேற்படி மனை மற்றும் மனையிட வகையறாவான வழக்குரை சொத்துக்களும், அதனுடன் இணைந்த சொத்துக்களும் ஆதியில் 1ம் வாதியின் தாத்தாவான ஆட்டுக்கார சின்னாத்தேவர் அவர்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சொத்துக்களை 1ம் வாதியின் தகப்பனாரான பேயத்தேவர் அவர்களுக்கு அவரது தந்தை சின்னாத்தேவர் கடந்த 21.12.1931ம் தேதியிட்ட ஆவண எண். 45/1932ன் மூலம் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரமானது ஏற்படுத்தி தாவா சொத்துக்களானது பேயத்தேவருக்கு பாத்தியப்பட்டு மேற்படியார் தனித்து சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், அவ்வாறு அவர் அனுபவித்து வந்த தாவா சொத்துக்களையும், அதனுடன் இணைந்த சொத்துக்களையும் மேற்படி பேயத்தேவர் அவரது 2வது மனைவியான 1ம் வாதியின் தாயாரும், 2ம் வாதியின் தகப்பனாரைப்பெற்ற தாயாருமான அங்கம்மாள் என்பவருக்கு கடந்த 22.01.1974 தேதியிட்ட ஆவண எண். 185ன் படி தானப்பத்திரம் ஏற்படுத்தியுள்ளதாகவும், அவ்வாறு அங்கம்மாள் தானமான கிடைத்த தாவா சொத்துக்களையும் அதனுடன் இணைந்த சொத்துக்களில் அவர் தனித்து சுவாதீன அனுபவத்தில் இருந்து வந்ததாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதிகள் தரப்பில் அங்கம்மாள் தாவா சொத்து மற்றும் அதனுடன் இணைந்த சொத்துக்களையும் அனுபவித்து வந்த நிலையில் அவர் காலமான பின்னிட்டு அவரது சட்டப்படியான வாரிசுகளான 1ம் வாதியும், அவரது சகோதரரான P.ராஜா என்பவரும் கடந்த 15.12.1988 தேதியில் அவர்களுக்குள் பதிவு பத்திரம் மூலம் பாகம் செய்து அவரவர் பாகத்தை அவரவர்கள்

தனித்தனியாக அடைந்து அனுபவித்து வருவதாகவும், தற்போது 1ம் வாதியின் சகோதரர் ராஜா அவர்களும், அவரது சட்டப்படியான வாரிசுகளும் மேற்படி ராஜா என்பவரின் பாகத்தை அனுபவித்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதி தரப்பில் 15.12.1988 தேதியில் பாகப்பத்திரம் மூலம் 1ம் வாதிக்கு கிடைத்த பாகம் தான் தாவா சொத்து என்றும், தனது பாகத்திற்கு கிடைத்த வழக்குரை சொத்துகளை 1ம் வாதி தனது அனுபவத்தில் வைத்து அனுபவித்து வந்ததாகவும், அவ்வாறு தாவா சொத்துக்களை 1ம்வாதி அனுபவித்து வந்த நிலையில் 1ம் வாதியும், அவரது மகனான 2ம் வாதி மைனராக இருந்ததால் 1ம் வாதியின் மனைவியும், 2ம் வாதியின் தாயாருமான கலைச்செல்வி என்பவர் 2ம் வாதிக்கு கார்டியனாக இருந்து கடந்த 16.05.1997ம் தேதி தாவா சொத்துக்களை பதிவு பாக பத்திரம் மூலம் ஆவண எண்.1898/1997 ன் படி பாகம் செய்து கொண்டதாகவும், அவ்வாறு பாகப்பத்திரம் மூலம் பாகம் செய்ததில் தாவா 1ம் லக்க சொத்தானது 1ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும், வழக்குரை 2ம் லக்க சொத்தானது 2ம் வாதிக்கு பாத்தியப்பட்டது என்று பாகப்பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், வழக்குரை 2ம் லக்க சொத்தில் 2ம் வாதி அப்போதைய கூடலூர் பேரூராட்சி அலுவலகத்தில் முறையான பிளான் அப்ரூவல் பெற்று 2ம் வாதியின் பெயரில் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், தற்போது 2ம் வாதி மேஜராகி விட்டதால் தாவா 2ம் லக்க சொத்தானது 2ம் வாதியின் தனித்த சுவாதீன அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருவதாகவும், வாதிகள் இருவரும் அவரவர்கள் பாகத்தை அவரவர்கள் அடைந்து வாதிகள் பெயரில் தனித்தனியாக அரசுக்கு செலுத்தவேண்டிய வீட்டு வரி, குடிநீர் குழாய் வரி, மின்சார கட்டணம் ஆகியவற்றை வாதிகள் இருவரும் அவரவர்கள் பெயரிலேயே செலுத்தி அவரவர்கள் கைவசம் வைத்து அனுபவித்து வருவதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதிகள் தரப்பில் வாதிகள் தாவா சொத்தில் ஏற்கனவே கட்டியுள்ள வீட்டை ஒட்டி காலியாக உள்ள பகுதியிலும் வாதிகளுக்கும் 1ம் வாதியின்

சகோதரரின் வாரிசுகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட வண்டிப்பாதையில் பிரதிவாதி 05.12.2025 ம் தேதியில் JCB வாகனத்தைக்கொண்டு மேற்படி வண்டிப்பாதையை அக்கிரம பிரவேசம் செய்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தததாகவும், அதனை பார்த்த 1ம் வாதி பிரதிவாதியிடம் " ஏன் எங்கள் பாதையை இவ்வாறு ஆக்கிரமிப்பு செய்து இடையூறு செய்கிறீர்கள் " என்று கேட்டதற்கு பிரதிவாதிகள் அவர்களது ஆட்களுடன் வந்து இடையூறு செய்தததாகவும், அது குறித்து 1ம் வாதி பிரதிவாதி மீது கூடலூர் வடக்கு காவல்நிலையத்தில் புகார் செய்து அதற்கு கூடலூர் வடக்கு காவல்நிலைய மனு ரசீது எண்.396/2025 வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி புகாரின் அடிப்படையில் மேற்படி காவல்நிலைய அதிகாரிகள் பிரதிவாதியை பலமுறை விசாரணைக்கு அழைத்தும் பிரதிவாதி ஆஜராகாமல் இருந்து வந்துள்ளதாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

மேலும், வாதிகள் தரப்பில் 1ம் வாதி தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 26.12.2025 ம் தேதி பிரதிவாதிக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளதாகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி வேண்டுமென்றே பெற்றுக்கொள்ளாத காரணத்தினால் மேற்படி அறிவிப்பானது 29.12.2025 ம் தேதியில் திருப்பப்பட்டுள்ளதாகவும், தாவா சொத்துக்களை வாதிகள் எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வருவதை தடுக்கும் வகையில் பிரதிவாதி வாதிகளுக்கு பல வழிகளிலும் இடையூறு செய்து வருவதாகவும், தாவா சொத்துக்களைப்பொறுத்தவரை பிரதிவாதி முற்றிலும் தொடர்பில்லாத மற்றும் சட்டப்படி உரிமையில்லாத மூன்றாம் நபர் என்றும், பிரதிவாதி கடந்த 05.12.2026 ம் தேதிய வழக்குரை சொத்துக்களில் அத்துமீறி நுழைந்து வாதிகளின் அனுபவத்தை இடையூறும் செய்யும் விதமான வீண்பிரச்சனைகள் செய்ய முயன்றதை வாதிகள் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் துணையுடன் தடுத்து நிறுத்திவிட்டதாகவும், மேலும் பிரதிவாதி வாதிகளை மிரட்டி வருவதாகவும், தாவா சொத்துகளில் எவ்வித பாத்தியமோ, அனுபவமோ, உரிமையோ இல்லாத நிலையில் வழக்குரை சொத்துக்களை எவ்வாறேனும்

சட்டத்திற்கு புறம்பான நிலையில் அபகரித்துவிடவேண்டும் என்ற எண்ணத்தில் பிரதிவாதி தாவா சொத்துக்களிலுள்ள வாதிகளின் தனித்த சுவாதீன அனுபவத்திற்கு இடையூறு செய்யும் வகையில் தொடர்ந்து வாதிகளை தாவா சொத்தை அமைதியாக அனுபவிக்க விடாமல் மிரட்டி வருவதாகவும், ஆகவே தாவா சொத்துகளில் வாதிகளின் சுவாதீனத்தை பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

3. இவ்வழக்கில் பிரதிவாதிக்கு அழைப்பாணையானது சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதியானவர் தோன்றாதரப்பினராக இருந்ததால் மேற்படியாருக்கு எதிராக 27.03.2026 தேதியில் ஒருதலைபட்ச உத்தரவானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

4. வாதிகள் தரப்பில் 1ம் வாதியானவர் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் சாட்சிய சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**5. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதிகள் தாவாவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

6. **வாதிகள் தரப்பு வாதம் யாதெனில்,** தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் குறித்து வாதியும், அவரது சகோதரருமான ராஜா என்பவரும் 15.12.1988ம் தேதியில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாகவும், அதில் தாவா சொத்து மற்றும் இதர சொத்து 1ம் வாதிக்கு ஒதுக்கப்பட்டு அவர் சுவாதீன அனுபவித்தில் இருந்து வந்ததாகவும், இவ்வாறான சூழ்நிலையில் வாதியும், அவரது மகனான 2ம் வாதிக்கு கார்டியன் என்ற முறையில் அவரது மனைவி கடந்த 16.05.1997ம் தேதியில்

பாகப்பிரிவினை பத்திரமானது ஏற்படுத்திக்கொண்டதில் தாவா முதல் அயிட்ட சொத்தானது 1ம் வாதிக்கும், 2வது அயிட்ட சொத்தானது 2ம் வாதிக்கும் பாத்தியப்பட்டதாகவும், தாவா 2வது அயிட்ட சொத்தில் 2ம் வாதி முறையாக அனுமதி பெற்று வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், தாவா சொத்துக்களை வாதிகள் அனுபவித்து வந்து அதற்கான வரி வகையறாக்களை செலுத்தி வருவதாகவும், தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீனத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதாகவும், தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், ஆகவே தாவா சொத்தில் வாதிகளின் சுவாதீன அனுபவத்தை பிரதிவாதி எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்துள்ளதாக வாதிடப்பட்டது.

இவ்வழக்கில் 1ம் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ.13 வரையிலான சான்றாவணங்களானது குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ1 ஆன 21.12.1931ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தினை பரிசீலனை செய்யும் போது பேயத்தேவன் என்பவர் அதில் கண்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளது தெரியவருகிறது. வா.சா.ஆ 2–ஆன 22.01.1974ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரத்தை பரிசீலனை செய்யும் போது பேயத்தேவர் அதில் கண்ட சொத்தை தனது 2வது மனைவியான அங்கம்மாள் என்பவருக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரமானது ஏற்படுத்தியுள்ளார். இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் மேற்படி அங்கம்மாள் இறந்துவிட்டதாக கூறியிருப்பினும், அது குறித்து குறிப்பாக எந்தொரு பொருண்மையும் வழக்குரையில் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

வா.சா.ஆ 3 ஆன 15.09.1988ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலனை செய்யும் போது அதில் கண்ட சொத்தை பேயத்தேவர் குமாரர்களான முருகேசன், ராஜா ஆகியோர்கள் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டதும், அதில் கண்ட A அட்டவணை சொத்து முருகேசன் என்பவருக்கும், B அட்டவனை சொத்தானது அவரது சகோதரரான ராஜா என்பவருக்கு

ஒதுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ 4 ஆன 16.05.1997 ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தை பரிசீலனை செய்யும்போது முருகேசன் குடும்பத்தார் அதில் கண்ட சொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டதும், அதில் A அட்டவணை சொத்தானது 1 ம் வாதி முருகேசன் என்பவருக்கும், B அட்டவனை சொத்தானது 2 ம் வாதிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

தாவா 1 ம் வாதியின் பெயரிலான சொத்துவரி ரசீதானது வா.சா.ஆ 5 ஆகவும், தாவா 1 ம் வாதியின் பெயரிலான குடிநீர் கட்டண ரசீது வா.சா.ஆ.6 ஆகவும், 2 ம் வாதியின் பெயரிலான சொத்து வரி ரசீதானது வா.சா.ஆ 7 ஆகவும், கலைச்செல்வி என்பவர் பெயரிலான குடிநீர் கட்டண ரசீது வா.சா.ஆ 8 ஆகவும், 26.12.2025 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.9 ஆகவும், மேற்படி அறிவிப்பானது திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறையானது வா.சா.ஆ 10 ஆகவும், 1 ம் வாதியின் பெயரிலான மின் கட்டண ரசீது வா.சா.ஆ.11 ஆகவும், கலைச்செல்வி என்பவர் பெயரிலான மின்கட்டண ரசீது வா.சா.ஆ 12 ஆகவும், கூடலூர் வடக்கு காவல்நிலைய மனு ரசீது எண். 396/2025 ஆனது வா.சா.ஆ 13 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பரிசீலனை செய்யும் போது தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை பேயத்தேவர் என்பவர் கிரையம் பெற்றதும், மேற்படி பேயத்தேவர் வா.சா.ஆ 2 மூலம் தனது இரண்டாவது மனைவியான அங்கம்மாள் என்பவருக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தியுள்ளது தெரியவருகிறது. இவ்வழக்கில் அங்கம்மாள் இறந்து விட்டதாக வாதிகள் தரப்பில் எடுத்துரைக்கப்படினும், அது குறித்து எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் மேற்படி அங்கம்மாள் இறந்து விட்டதால் அவரது வாரிசுகளான இவ்வழக்கின் வாதி முருகேசன் மற்றும் ராஜா ஆகியோர்கள் வாசா.ஆ 3 ஆன பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் அதில்

கண்ட சொத்து குறித்து பாகப்பிரிவினை பத்திரமானது ஏற்படுத்தியுள்ளதும், அப்பத்திரத்தில் கண்ட A அட்டவணை சொத்தானது இவ்வழக்கு வாதிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதும், மேற்படி சொத்தானது தான் இவ்வழக்கின் தாவா சொத்து என்பதும், தாவா சொத்துக்களை பொறுத்து வாதியும், அவரது மகனும் வா.சா.ஆ.4 ன் மூலம் 16.05.1997 ம் தேதியில் பாகப்பிரிவினை பத்திரமானது ஏற்படுத்திக்கொண்டுள்ளதும், தாவா சொத்திற்கான வரி வகையறாக்களை வாதிகள் செலுத்தி சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவது தெரியவருகிறது.

இவ்வழக்கில் வாதிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்களை பொய்ப்பிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இவ்வழக்கு பிரதிவாதிக்கு தாவா குறித்த அழைப்பாணையானது சார்வு செய்யப்பட்டும் தொடர்ந்து தோன்றா தரப்பினராகவே இருந்து வருகிறார். இவ்வாறான சூழ்நிலையில், வாதிகள் தங்களது வழக்கை தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யதுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, தாவா சொத்துக்களில் வாதிகளின் சுவாதீன அனுபவத்தை பிரதிவாதியானவர் எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென வாதிகள் கோரும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமானது வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**7. <u>முடிவாக,</u>**

தாவா அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்துக்களில் வாதிகளின் சுவாதீன அனுபவத்தை பிரதிவாதியோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும், தொந்தரவும் செய்யக்கூடாதென்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. செலவு தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம்

செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.06.17 18:01:45 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>**

| | |
|---|---|
| வா.சா.1. | திரு.P.முருகேசன் (எ) முருகன் |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 21.12.1931 | பேயத்தேவர் பெயரிலான கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 22.01.1974 | அங்கம்மாள் பெயரிலான தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 15.12.1988 | முருகேசன் மற்றும் ராஜா என்பவருக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 16.05.1997 | வாதிகளுக்கு இடையே ஏற்பட்ட கிரைய பத்திரம் அசல் |
| வா.சா.ஆ.5 | 04.04.2025 | 1ம் வாதியின் பெயரிலான சொத்துவரி இரசீது அசல் |
| வா.சா.ஆ.6 | 04.04.2025 | 1ம் வாதி பெயரிலான குடிநீர் கட்டண ரசீது அசல் |
| வா.சா.ஆ.7 | 04.04.2025 | 1ம் வாதி பெயரிலான சொத்து வரி ரசீது அசல் |
| வா.சா.ஆ.8 | 04.04.2025 | கலைச்செல்வி என்பவர் பெயரிலான குடிநீர் கட்டண ரசீது அசல் |
| வா.சா.ஆ.9 | 26.12.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு – அலுவலக நகல் |
| வா.சா.ஆ.10 | – | திருப்பப்பட்ட அஞ்சலக உறை |
| வா.சா.ஆ.11 | 16.12.2025 | 1ம் வாதியின் பெயரிலான மின் கட்டண ரசீது அசல் |
| வா.சா.ஆ.12 | 03.09.2013 | கலைச்செல்வி என்பவர் பெயரிலான மின்கட்டண ரசீது அசல் |
| வா.சா.ஆ.13 | 07.12.2025 | கூடலூர் வடக்கு காவல்நிலைய மனு ரசீது எண்.396/2025 |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.</u>**

PRAVEENA Digitally signed by PRAVEENA Date: 2026.06.17 18:01:53 +0300

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**உத்தமபாளையம்.**